# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 22, பிரஜோற்பத்தி—திருவள்ளுவராண்டு 2023.

## 1992, பிப்ரவரி 5, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணி அளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து ”.

உரிய காலத்திற்காக கொக்கு போல் அமைதியாகப் பொறுத்திருக்க வேண்டும். காலம் வாய்த்த போது, அதன் குத்து போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண் 41, திரு. தேனி பன்னீர்செல்வம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

### போடி நாயக்கனூரில் கருவூலம்.

41—

வினா எண். *3562 திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போடிநாயக்கனூரில் ஏற்கெனவே இயங்கிவந்த கருவூலம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதை மீண்டும் போடிநாயக்கனூரில் கொண்டுவர பொதுமக்கள் சார்பில் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போடிநாயக்கனூரில் இதுவரை கருவூலம் எதுவும் இயங்கி வரவில்லை. மேலும், போடிநாயக்கனூரில் மீண்டும் கருவூலம் கொண்டுவர பொதுமக்களிடமிருந்தோ அல்லது பிறதுறை அலுவலர்களிடமிருந்தோ விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

திரு தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரிலே ஏற்கெனவே கருவூலத்திலுடைய ஒரு பிரிவு இயங்கியதாகவும், அது ஏதோ ஒரு காரணத்திற்காக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதாகவும் என்னிடம் பொது மக்கள் சார்பிலே கோரிக்கை மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேயும், அரசு அலுவலர்களுடைய பல்வேறு பிரிவு அலுவலர்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலேயும், இந்தக் கோரிக்கையை இந்த அவையின்மூலம் வைத்திருக்கிறேன். மேலும், இன்றைக்கு போடியிலே இருக்கக்கூடிய பல்வேறு அரசு அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி அலுவலகம், பேரூராட்சி, கால்நடை மருந்தகங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் கல்வித் துறையினைச் சார்ந்த பல்வேறு பிரிவு அலுவலர்கள் எல்லாம் அரசுப் பணிகள் சம்பந்தமாக சம்பளப் பட்டியல் பெறுவது அல்லது பயணப்படி பட்டியல் பெறுவது, வாகன வரி போன்ற பல்வேறு காரணங்களுக்காக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : பல்வேறு காரணங்களுக்காக அங்கே போடியிலிருந்து தேனிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. தேனியிலும் கூட, தேனி நகரத்திலே அமையாமல் அந்த அலுவலகம் மதுரை ரோட்டிலே 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அந்த அலுவலர்கள் மீண்டும் ‘ பில்லை ’ மாற்றம் செய்ய வேண்டுமென்றால், தேனிக்கு வந்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. விளக்கம் கூடாது.

திரு. தேனி பன்னீர்செல்வம் : அங்கே இருக்கக்கூடிய பாரத ஸ்டேட் வங்கிக்குச் செல்ல வேண்டுமென்றால் மீண்டும் பெரியகுளம் சாலைக்கு வர வேண்டியிருக்கிறது. இது போன்ற பல்வேறு சிரமங்கள் அந்தப் பணியிலே இருக்கின்ற காரணத்தால், பொதுமக்களுடைய சௌகரியத்தை கருதி குறிப்பாக, போடித் தொகுதியில் இருக்கக்கூடிய மலைவாழ் மக்களுடைய வசதிகளைக் கருதி, போடி தொகுதியிலே சுதந்திரப் போராட்டத் தியாகிகள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். ஏறக்குறைய நூற்றுக்கும் அதிகமான தியாகிகள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள். துணைக் கேள்வியில், பதிலையொட்டியே கேள்வி இருக்கவேண்டும். விளக்கம் என்பது பேசுகிற போது தான் இருக்க வேண்டும். கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இவ்வளவு பிரச்சினைகள் இருக்கக்கூடிய

1992 பிப்ரவரி 5]

இந்தக் காலக்கட்டத்தில் பயணப்படிகள் மிச்சம் ஆகின்ற காரணத்தையொட்டி, கருவூலம் அங்கே அமைவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்பதை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே பாரத ஸ்டேட் வங்கியும் அங்கே இயங்கி வருகிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில், அங்கே கருவூலத்தை அமைப்பதற்கான வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையிலிருந்து கருவூலத் துறை பிரிவதற்கு முன்னால், போடிநாயக்கனூரில் அரசுக்குச் சேர வேண்டிய வருவாயை வசூல் செய்வதற்கு ஒரு வசூல் அலுவலகம் அதாவது ''கலெக்ஷன் டெப்போ'' ஒன்று இருந்தது. உத்தமபாளையத்தில் முழுமையான அதிகாரம் பெற்ற வட்டாட்சியர் அலுவலகம் ஆரம்பித்ததற்குப் பிறகு, போடிநாயக்கனூரிலே இயங்கி வந்த வசூல் அலுவலகம் ''கலெக்ஷன் டெப்போ'' மூடப்பட்டு, அது உத்தமபாளையம் கருவூலத்தோடு இணைக்கப்பட்டது. இப்போது வட்டம் மற்றும் தலைநகர் ஒவ்வொன்றிலும் ஒரு துணைக் கருவூலம் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் 170 துணைக் கருவூலங்கள் வட்டங்களுடைய மையப் பகுதிகளிலே, தலைநகர்களிலே அமைந்து இருக்கின்றன. எந்தக் கருவூலத்திலே வேலைப் பளு அதிகமாக இருந்து ஒரு கருவூலம் இயங்க முடியாத அளவுக்கு அதிகமாக கொடுக்கல், வாங்கல் முறைகள் இருக்குமேயானால், அப்படிப்பட்ட இடங்களிலே மட்டும் போதுமான அளவுக்குக் கொடுக்கல், வாங்கல் ஆகியவைகள் இருப்பதையொட்டி வேறு துணைக் கருவூலங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் 32 துணைக் கருவூலங்கள் பல்வேறிடங்களில் பணியாற்றி வருகின்றன. என்றாலும் போடிநாயக்கனூரினைப் பொறுத்தவரையிலும் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உத்தமபாளையத்தில் ஒரு கருவூலமும் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தேனியில் ஒரு கருவூலமும் இருக்கின்றன. அங்கே எல்லாம் போதுமான அளவுக்குக் கொடுக்கல், வாங்கல் முறைகள் இருப்பதன் காரணத்தால் போடிநாயக்கனூரில் ஒரு தனிக்கருவூலம் ஏற்படுத்துவதற்குரிய வகையில் போதுமான அளவுக்கு வேலைப்பளு இருக்கிறது என்று கணக்கில் இல்லாததன் காரணத்தால் போடிநாயக்கனூரில் ஒரு புதிய கருவூலத்தைத் துவக்க வேண்டிய அவசியம் இல்லை. உத்தமபாளையம் கருவூலமும், தேனி கருவூலமும் அதனுடைய தேவைகளை நிறைவேற்றிவருகின்றன என்று சொல்லப்படுகிறது.

முற்பகல் 9-35

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கருவூலத்தைப் பொறுத்த வரையில் போடியிலிருந்து மட்டும் கணக்கெடுத்தால் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் சொல்லிய அந்த கிலோ மீட்டர் தொலைவு என்பது வரும். ஆனால் போடி தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களிலிருந்து வந்து பணியாற்றுகிற அலுவலர்கள் வந்து சேரவேண்டிய நிலையைக் கணக்கில் எடுத்துப் பார்க்கின்ற போது, 25 கிலோ மீட்டர் தொலைவுக்கும் அதிகமாக வருகிறது. எனவே, மலைப் பிரதேசங்களில் உள்ள மலைவாழ் மக்களின் நலன் கருதிஇந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி வரும் ஆண்டிலாவது இந்த துணைக் கருவூலம் அமைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி வட்டத் தலைநகரங்களிலே ஒரு துணைக் கருவூலம் அமைய வேண்டும் என்பது கொள்கை. அந்த வகையில் உத்தமபாளையம் தனி வட்டமாகப் பிரிந்ததற்குப் பிறகு இந்த உத்தமபாளையத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்கப்பட்டு இருக்கிறது. உத்தமபாளையத்தில் உள்ள கொடுக்கல், வாங்கல் ஆகியவற்றில் பளுவினைக் கணக்கெடுக்கின்றபோது அதைப் பிரித்து அந்த வட்டத்திற்குள்ளே இன்னொரு கருவூலம் அமைப்பதற்கு இப்போது வாய்ப்புக்கூறுகள இல்லை என்பதன் காரணத்தால் இப்போது புதிய கருவூலம் அமைப்பதற்குரிய அத்தியாவசியம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 42, திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

42—

நன்னிலம் நீதிமன்றம்.

வினா எண். *1552 திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலத்தில் ஏற்கெனவே இயங்கி வரும் சிவில் நீதிமன்றத்தோடு, கிரிமினல் நீதிமன்றத்தையும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று வழக்காடும் போது மக்களிடமிருந்தோ அல்லது வழக்கறிஞர் சங்கத்திடமிருந்தோ கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. எனவே, இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS